# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : DW-1 | Date : 14.11.2024

Case No. : **O.S. 353/2019** | Nationality : Indian

Name : முருகன் | Religion :

Father's/Husband's Name : ராமன் | Age : 48

Village :

Taluk :

<u>பி.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

21.12.2004 ம் தேதி 1ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்த போது சூரியனார்கோவில் வடக்கு தெருவில் வைத்துதான் ஈம சடங்கு நடைபெற்றது என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் தாவா சொத்தில் வாதி தான் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. நான் தற்போது சூரியனார்கோவில் ஊராட்சி மன்ற தலைவராக உள்ளேன் என்றால் சரிதான். எங்கள் ஊராட்சி மன்றம் சம்மந்தப்பட்ட வீட்டு வரி ரசீது வழங்குவதற்கு நான் பொறுப்பு என்றால் சரிதான். உரிய ஆவணங்கள் இல்லாமல் எங்கள் ஊராட்சியில் வீட்டு வரி ரசீது வழங்க மாட்டோம் என்றால் சரிதான். வாதி பெயரில் திருமங்கலக்குடி பஞ்சாயத்தில் வீட்டு வரி ரசீதுகள் வழங்கப்பட்டு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. வாதி தாவா சொத்திற்கு மின் இணைப்பு பெற்று பயன்படுத்தி வருவது தெரியுமா என்றால் தெரியாது. வாதி தற்போது இந்திரா குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடு கட்டப்பட்டு குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வீடு கட்ட ஆரம்பிக்கும்போது ஆட்சேபனை தெரிவித்ததின்பேரில் வீடு கட்டப்படவில்லை.

2 வாதி பெயருக்கு 1ம் பிரதிவாதியின் தகப்பனார் மாரிமுத்து கடந்த 02.09.1999 ம் தேதி ஒரு பதிவு செய்யப்படாத கிரய ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றாலும் அதில் 1ம் பிரதிவாதியின் மகன் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் வாதிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அந்த பட்டா போலியானது என்பதற்கு மெய்தன்மை சான்று வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு

வழங்கப்பட்ட பட்டாவில் பச்சமுத்து மகன் வீரமணி என்பதற்கு பதிலாக மாரிமுத்து மகன் வீரமணி என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் அதனை மாற்றம் செய்யக் கோரி வாதி திருவிடைமருதூர் வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 02.09.1999 தேதியிட்ட கிரய பத்திரத்தை ரத்து செய்வதற்கு நான் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் மேற்படி கிரய ஆவணம் பற்றி தெரிய வந்தது.

3. 02.09.1999 தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் தகப்பனார் மாரிமுத்து என்பவர் எழுதி கொடுத்துள்ள கிரய பத்திரத்தின் அடிப்படையில் அதுநாள் முதல் தாவா சொத்தில் வாதி மற்றும் அவரது குடும்பத்தார் இந்திரா காந்தி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் வாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக தாவா சொத்தில் வீடு கட்ட விடாமல் இடையூறு செய்து வருகிறோம் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் வாதி தான் குடியிருந்து வருகிறார் என்றாலும் அவர் அனுபவத்தில் இல்லை என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.